மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்; தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் என்பது பற்றிய பட்டியல் குறிப்பு இங்கே இல்லை. ஆனால் ஆதி திராவிட மக்கள் விண்ணப்பிக்கின்ற போது எந்தத் தொழிலை அவர்கள் செய்கிறார்களோ அந்தத் தொழில்களுக்குரியபெர்மிட் மற்றும்லைசன்ஸ் போன்றவைகளை அவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றது.

திரு.பி. எம். தங்கவேல்ராஜ்; தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில்களுக்கென்று தொழில் பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஆகவே அவற்றிலே செட் அலாட் பண்ணும்போது அதிலே அரிசன மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுடைய அந்த உரிமங்கள் அதற்குரிய வகைகளில் செய்யப்பட்டுள்ளன.

பூம்புகார் கைவினைப்பொருள் விற்பனையகத்தின் சார்பில் நடைப்பெற்ற 'நிர்மல் ஓவியப்பயிற்சி' வகுப்பு

80—

* வினா எண் 19513 திரு து. புருஷோத்தமன்; மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கைவினைப் பொருள் உற்பத்தி விற்பனையகத்தின் சார்பில் 'நிர்மல் ஓவியப்பயிற்சி' வகுப்பு நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனைபேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்?

(இ) பயிற்சி முடித்தவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) 11-12-1981 முதல் 10-12-82 வரை ஓவியப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தற்சமயம் பயிற்சி நிலையம் மூடப்பட்டுவிட்டது.

(ஆ) 8 நபர்கள்

(இ) 4 நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பயிற்சி நிலையம் மூடப்பட்டுவிட்டதால் தற்சமயம் அவர்கள் வேலையில் இல்லை.

திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கைவினைப் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்று பூம்புகாரில் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா? இல்லையென்றால், அமைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் எதுவும் இல்லை.